சுருக்கம்

பள்ளிக் கல்வி – இலவச பாடநூல் விநியோகம் – 2011–2012 ஆம் கல்வி ஆண்டிற்கு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் பள்ளிகட்கு இலவச பாடநூல்கள் – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலம் விநியோகம் செய்தல் – அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (க்யு)துறை,

அரசாணை (3டி) எண். 200 நாள் 14.12.2010

(திருவள்ளுவர் ஆண்டு 2041
கார்த்திகை 28)
படிக்கப்பட்டவை :

1. அரசாணை (நிலை) எண்.102, பள்ளிக் கல்வித் (க்யு) துறை, நாள் 28.04.2009.
2. அரசாணை (நிலை) எண்.36, பள்ளிக் கல்வித் (க்யு) துறை, நாள் 16.02.2010.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 82952/இ/இ3/ 2010, நாள் 09.09.2010.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.82952/இ/ இ3/ 2010, நாள் 13.10.2010.

---

ஆணை :–

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து மாணவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் அனைத்து பள்ளிகளுக்கும் தக்க தருணத்தில் விநியோகம் செய்ய ஏதுவாக தமிழ்நாடுப் பாடநூல் கழகம் ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யவும், அதனை பள்ளிக்கல்வி மற்றும் தொடக்கக்கல்வி துறைகள் இலவச பாடநூல் விநியோகத்தினை மேற்கொள்ள / பயன்படுத்திக் கொள்ளவும் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–2011–ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு இலவச பாடநூல்களை அந்தந்த மாவட்ட மண்டல தமிழ்நாட்டு பாடநூல் கிடங்கில் இருந்து அஞ்சல் துறை மூலம் பள்ளிகளுக்கும் விநியோகம் செய்ய ஆணை வழங்கப்பட்டது.

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் அறிக்கையில் 2011 – 2012ஆம் கல்வி ஆண்டில் இலவச பாட நூல்களை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் தமிழ்நாடு பாடநூல் கழகத்திலிருந்து அஞ்சல் துறை மூலம் அஞ்சல் துறையால் நிர்ணயிக்கப்படும் செலவினத்தில் அனுப்பினால் செலவுத் தொகை உத்தேசமாக 3 மடங்கு அதிகரிப்பதுடன் சில இடர்பாடுகள், சிரமங்கள் ஏற்படுவதாக கூறியுள்ளார். எனவே பள்ளிக் கல்வி இயக்குநர் “அஞ்சல் துறை மூலம் பாடநூல் விநியோகம்” செய்ய அரசுக்கு அனுப்பப்பட்ட கருத்துருவினை இரத்து செய்து 2009–2010 மற்றும் முந்தைய ஆண்டுகளில் செயல்படுத்தப்பட்ட முறையின் படியே, மீண்டும் 2011–2012 ஆம் கல்வியாண்டில் இலவச பாடநூல்களை “தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர் மூலம்” பள்ளிகளுக்கு விநியோகம் செய்ய ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. மேலும், 26.10.2010 அன்று முதன்மைச் செயலர் (பொறுப்பு), பள்ளிக் கல்வித் துறை அவர்கள் தலைமையில் காலை 10.30 மணியளவில் நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வுக்குப்பின் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது :–

(i) பாடநூல் விநியோகத்தை பொறுத்தவரையில் சென்ற கல்வி ஆண்டில் தபால் துறையின் மூலமாக பாடநூல்கள் விநியோகம் செய்வதில் ஏற்பட்ட இடர்பாடுகளை பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்க கல்வி இயக்குநர் அவர்கள் தெரிவித்ததற்கு இணங்க வரும் கல்வியாண்டிற்கான பாடநூல்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்ட போக்குவரத்து கட்டணங்களுக்கு உட்பட்டு தமிழ்நாட்டுப் பாடநூல்

கழக வட்டார கிடங்குகளிலிருந்து மாவட்ட கல்வி அலுவலக தலைமையிடங்களால் நிர்ணயிக்கப்பட்ட மைய பள்ளிகளுக்கு (Nodal schools) விநியோகம் செய்யும் பொறுப்பை தமிழ் நாட்டுப் பாடநூல் கழகமே மேற்கொள்ளுவது என முடிவு செய்யப்பட்டது.

(ii) மாவட்ட கல்வி மைய பள்ளிகளிலிருந்து (Nodal school) சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு பாடநூல்களை விநியோகம் செய்யும் பொறுப்பை பள்ளிக் கல்வி மற்றும் தொடக்க கல்வி இயக்ககங்கள் ஏற்றுக் கொள்வது எனவும் அதற்கு ஆகக்கூடிய செலவினத்தை (மாவட்ட ஆட்சித்தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள போக்குவரத்து கட்டணங்களுக்கு உட்பட்டு) பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்க கல்வி இயக்குநருக்கு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் முதலில் வழங்குவது எனவும் அத்தொகையினை ஏற்கெனவே உள்ள நடைமுறையின்படி பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோர் அரசிடமிருந்து திரும்ப பெற்று பாடநூல் கழகத்திற்கு வழங்குவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

4. மேலே பத்தி 2–ல் உள்ள கருத்துருவை அரசு கவனமாக பரிசீலித்தது. மேலே பத்தி 3–ல் குறிப்பிடப்பட்ட 26.10.2010 அன்று நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினை அரசு கீழ்க்கண்ட கருத்துக்களுடன் ஏற்று 2011–2012–ஆம் கல்வியாண்டில் "இலவச பாடநூல்களை தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம்" பள்ளிகளுக்கு விநியோகம் செய்ய பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(i) தற்போதுள்ள விதிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

(ii) பள்ளிகளுக்கு விநியோகம் செய்யும் பாட நூல்கள் உரிய காலத்தில் விநியோகிக்கப்படுகிறது என்பதை பள்ளிக்கல்வி இயக்குநரும்/தொடக்கல்வி இயக்குநரும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ.ஜோதி ஜெகராஜன்
அரசு செயலாளர்

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் கழகம்,
சென்னை–06.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–06.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–06.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–06.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35.
நகல்
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–09.

//உண்மை நகல்//

அரசு சார்புச் செயலாளர்